இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 148 | இதழ் : 09 | திகதி : 28.07.2024 | விலை : 50.00

# முதியோர் ஆற்றும் அளப்பரிய பங்கினை நாம் உணர்ந்து வாழ்வோம் – திருத்தந்தை



முதியோருடன் நெருக்கமாக இருந்து அவர்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றும், இதன் வழியாகக் குடும்பம், சமுதாயம், தலத்திருஅவை போன்றவற்றில் அவர்கள் ஆற்றும் முக்கியமான பங்கினை நாம் உணர்ந்து கொள்ள முடியும் என்றும் தனது டுவிட்டர் குறுஞ்செய்தியில் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் தாத்தாக்கள், பாட்டிகள், முதியோர் போன்றோருடன் நெருக்கமாக இருப்பதன் வழியாக குடும்பத்திலும், சமூகத்திலும், தலத்திருஅவையிலும் அவர்கள் கொடுத்து வரும் மிகப்பெரிய பங்கினை நாம் உணர்ந்து கொள்ளலாம் எனவும் முதியோர் வழியாக ஏராளமான கொடைகளையும், அருளையும் ஆசீரையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார். ஜூலை 28 ஞாயிற்றுக்கிழமை திரு அவையில் கொண்டாடிய நான்காவது உலக தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோர் தினத்தை முன்னிட்டு முதியோர் என்ற தலைப்பில் திருத்தந்தை இவ்வாறு தனது கருத்துக்களைப் பதிவிட்டுள்ளார். முதியோர் மேல் மிகுந்த அக்கறை கொண்டிருக்கும் திருத்தந்தை குடும்பத்திலும் சமுதாயத்திலும் தலத்திருஅவையிலும் அவர்கள் மாண்போடு நடத்தப்பட்டு மரியாதையோடு கவனிக்கப்படவேண்டும் எனப் பல முறை வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மொன்போர்ட் இல்லத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு



அளம்பில் சுவாமி தோட்ட வளாகத்தில் அமையப்பெறவுள்ள மொன்போர்ட் அருட்சகோதரர்களின் 'மொன்போர்ட் இல்லத்திற்கான' அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 22ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. இலங்கை மொன்போர்ட் துறவற சபை முதல்வரும் யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி மொன்போர்ட் சர்வதேச பாடசாலை அதிபருமான அருட் சகோதரன் மரியபிரகாசம் அவர்களின் தலைமையில் அளம்பில் சுவாமி தோட்ட இயக்குநர் அருட்தந்தை யூட் அமலதாஸ் அவர்களின் உதவியுடனும் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அடிக்கல்லை ஆசீர்வதிக்க மொன்போர்ட் அருட்சகோதரர்களின் திருச்சி மாகாண முதல்வர் அருட்சகோதர் இருதயம் அவர்கள் அதனை நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வில் குருக்கள், துறவிகள், குளுனி அருட்சகோதரிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். இந்தியாவிலிருந்து வருகை தந்து, தீவகம் அல்லைப்பிட்டிப் பிரதேசத்தில் சர்வதேச பாடசாலையொன்றை அமைத்து, கல்விப் பணியாற்றிவரும் மொன்போர்ட் அருட்சகோதர்கள் தங்களின் பணிகளை விஸ்தரிக்கும் நோக்கோடு 'மொன்போர்ட் இல்லத்தை' அமைக்கவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## டொன்பொஸ்கோ ஆங்கிலப் பாடசாலை கட்டடத் திறப்பு விழா



கிளிநொச்சி பல்லவராயங்கட்டு புனித டொன்பொஸ்கோ ஆங்கிலப் பாடசாலை வளாகத்தில் அமைக்கப்பட்ட பாடசாலைக்கான புதிய கட்டடத்திறப்புவிழா கடந்த 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பாடசாலை இயக்குணர் அருட்தந்தை மெல்வின் றோய் அடிகளாரின்தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை புதிய கட்டடத்தை ஆசீர்வதிக்க கட்டத்திற்கான நிதி அனுசரணை வழங்கிய இத்தாலி நாட்டை சேர்ந்த கலாநிதி சான்றோ வெரோனிசி அவர்கள் அதனைத் திறந்துவைத்தார்.

ப.7

## "திருமறைக் குறள்" நூல் வெளியீட்டு விழா



அமரர் கஸ்பார் பஸ்தியாம்பிள்ளை அவர்களின் "திருமறைக் குறள்" நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த 27ஆம் திகதி சனிக்கிழமை அன்று யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெற்றது. பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் அருட்தந்தை எயின்சிலி றொசான் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்து இந்நூலை வெளியிட்டு வைத்தார்.

இந்நிகழ்வில் சிறப்புவிருந்தினராக 'கலைமுகம்' சஞ்சிகை ஆசிரியர் திரு. செல்மர் எமில் அவர்கள் கலந்துசிறப்பிக்க நூலுக்கான மதிப்பீட்டு உரையை உடுவில் பங்குத்தந்தை அருட்தந்தை அருட்செல்வன் அடிகனார் வழங்கினார். இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அமரர் கஸ்பார் பஸ்தியாம் பிள்ளை அவர்களின் குடும்ப உறுப்பினர்களெனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.


## பொன் விழா வாழ்த்துக்கள்



அருட்பணி அல்பன் அ.ம.தி.

அமதி அரும்பணியகத்தில்
தியாகத்தின் தியாகமாய்
உருகிப் பணி பல
புரியும் பொற்சுடரே!
இத்தரை மீது எத்தனை
பணிகள் நித்தமும் புரிந்த
நிதர்சனத்தை நினைந்து
நட்டதை உயிராக்கும்
பட்டதைப் பயிராக்கும்
நல் அறுவடைகள்
நல்கும் உங்கள்
பணி தொடர
இறையாசீர் வேண்டி
வாழ்த்துவோமே...

## வெள்ளி விழா வாழ்த்துக்கள்



அருட்பணி றொபின்சன்

யாழ் திருஅவை வானில்
பூத்திட்ட வெள்ளியே!
இறைபணியும்
கல்விப்பணியும்
இரு கண்களெனக் கொண்டு
வலம்வரும் இறைவனின்
திராட்சைத் தோட்ட
உத்தம ஊழியனே!
நூறத்தனையாய் கனிகள்
கொடுக்கின்றீர்
தொட்ட பணிகள்
தொடுவானமாய் தொடர
தொடுக்கின்றோம்
ஆசியுடன் வாழ்த்துக்கள்



அருட்பணி இராஜசிங்கம்

யாழ் மறைமண் குளிர
பணிமழை பொழியும்
பணிக் குருவே!
குருத்துவப் பணிதனை
குவலயம் போற்றும் வகை
கோதுமை மணியென
உடைந்து
பலன்தந்து வெள்ளியானீர்
பணிக்குருத்துவம்
நலமே அணிசெய்ய
இணையற்ற இறைபணிக்கு
இறையருள் வேண்டி
வாழ்த்துகின்றோம்

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

# எமது எண்ணம்

## தமிழ்த் தேசியத்தைக் கொச்சைப்படுத்தும் சாவகச்சேரி ஊழல் மோசடி விவகாரம்

இலங்கைத்தீவில் ஊழல்மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம் என்பது இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து "இலங்கை அரச" கட்டமைப்பின் ஒரு முறையற்ற பண்பாடாக மாறிவிட்டது. 2009 இற்குப் பின்னரும் அதற்கு முன்னரான காலத்திலும் போர் என்பதைக் காரணம் கூறி நடந்த ஊழல் மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகங்கள் பற்றி சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் பலவற்றின் அறிக்கைகளில் காணமுடியும்.

2022 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகூட ஊழல்மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகங்கள் காரணம் என்று இலங்கைக்கு நிதி வழங்கும் நாடுகளும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் சுட்டிக்காட்டியுமுள்ளன.

சுகாதாரத் துறையில் அதுவும் உயிர்காக்கும் மருத்துவத் துறையில் நடந்த மாபெரும் ஊழல் தொடர்பான விவகாரத்தில் முன்னாள் சுகாதார அமைச்சர் ஒருவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். உயர் அதிகாரிகள் சிலரும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இப் பின்னணியில் யாழ்ப்பாணம் சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் இடம்பெற்ற ஊழல்மோசடிகள் பற்றிய கதைகளில் உண்மையில்லாமலில்லை. ஆனால் இந்த ஊழலுக்குப் பின்னால் கொழும்பு நிர்வாகத்தின் தொடர்புகள் அறிவுறுத்தல்கள் இருப்பதாகத்தான் தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறுகின்றார்கள்.

விரும்பியோ விரும்பாமலோ அந்த ஊழல்மோசடிகளுக்கு மருத்துவர்கள் சிலர் துணை போயிருக்கலாம். ஊழல் புரிந்தோர் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

அதற்காக ஒட்டுமொத்த மருத்துவத்துறையும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து மருத்துவர்களும் ஊழல்வாதிகள் என்ற தொனியில் கருத்திட எவருக்கும் உரிமையில்லை.

சாவச்சேரி மக்கள் தமது பிரதேச வைத்தியசாலையில் போருக்குப் பின்னரான சூழலில் இடம்பெற்று வந்த ஊழல்மோசடிகளுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடிய உணர்வு மிகவும் பெறுமதியானது. ஆனால் அந்த மக்களின் நேர்மையான உணர்வுகளோடு ஊழல்மோசடிக்கு எதிராகக் குரல்கொடுப்பதாகக் கூறிக்கொள்ளும் சிலர் விளையாட முற்படுகின்றனர்.

அந்த மக்களின் அப்பளுக்கற்ற உணர்வுகளையும் தமிழர்களின் அரசியல் விடுதலை இலக்குகளையும் கனகச்சிதமாகப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கத்தின் ஊழல்மோசடிகள், அதிகாரத் துஷ்பிரயோகங்களை மூடி மறைக்க முற்படுவது பெரும் குற்றமாகும்.

ஏதோ யாழ்ப்பாணத்தில்தான் ஊழல்மோசடி, நடக்கிறது இலங்கை அரசாங்கமும் அதன் கட்டமைப்பும் நேர்மையானது என்ற தொனியில் சிலர் பேசுகின்றனர். அதுவும் சாவகச்சேரி மருத்துவமனையில் ஊழல் நடந்திருப்பதாகச் சில ஆதாரங்களைக் கையில் எடுத்துக்கொண்டு பிரதேச மக்களின் உணர்வுகளைப் பயன்படுத்தி, இலங்கை அரசாங்கத்தையும் ஊழல் மோசடியில் ஈடுபட்ட கொழும்பு அரசியல்வாதிகள் மற்றும் உயர் அதிகாரிகளையும் காப்பாற்ற முற்படுவது மிகக் கேவலமான செயல்.

ஊழல்மோசடிகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதுடன் தமது பிரதேச வைத்தியசாலை ஒழுங்கான முறையில் இயங்க வேண்டும் என்று சாவகச்சேரி மக்கள் எதிர்பார்க்கின்றனர். அந்த ஒரு காரணத்துக்காகவே அவர்கள் வீதியில் இறங்கிப் போராடினார்கள்.

ஆனால் அங்கு பணியாற்ற வந்த அந்த வைத்தியர் அந்த மக்களின் உணர்வுகளைப் பயன்படுத்தித் தனது சொந்த பிரபல்யத்துக்கும் தனது அரசியல் பிரவேசத்துக்கும் ஏற்ப போராட்டத்தை மடைமாற்றியுள்ளார்.

கொழும்புக்குச் சென்று சிங்கள அரசியல் தலைவர்களைச் சந்திப்பது படம் எடுத்து சமூக வலைத் தளங்களில் பதிவிடுவதன் நோக்கம் என்ன?

ஊழல் மோசடியை அம்பலப்படுத்தி சாவகச்சேரி வைத்தியசாலையை நல்ல முறையில் இயக்கவேண்டுமாக இருந்தால், அதற்கான செயற்பாடுகள் வேறு வகையாக இருக்கவேண்டும். அதாவது அரசியல் சாயமற்ற சுயாதீனம் பேணப்படவேண்டும். இதனை மக்கள் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும். மெய்பொருள் காண்பதே இன்றைய உடனடித் தேவை.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# தர்மபுரம் பங்கில் வியாகுல அன்னைமரி ஊழியர் சபை அருட்சகோதரிகள் பணித்தள மடம் திறப்பு விழா



இந்தியாவிலிருந்து வருகைதந்து தர்மபுரம் பங்கில் பணியாற்றும் வியாகுல அன்னை மரி ஊழியர் சபை அருட்சகோதரிகளின் பணிகளை விஸ்தரிக்கும் நோக்கோடு விசுவமடு புனித இராயப்பர் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டு வந்த பணித்தள மடத்திற்கான கட்டுமானப்பணிகள் நிறைவடைந்த நிலையில் அக்கட்டட திறப்பு விழா கடந்த 16ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை நிக்ஸன் கொலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் கலந்து பணித்தள மடத்தை ஆசீர்வதித்து திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட நிதி முகாமையாளர் அருட்தந்தை நேசநாயகம், முல்லைத்தீவு மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை அன்ரனிப்பிள்ளை, வியாகுல அன்னைமரியின் ஊழியர் சபை தலைமை அருட்சகோதரி டெக்லா மேரி, அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பங்கு மக்களெனப் பலரும் கலந்துகொண்டனர்.

# தேசிய ரீதியிலான கத்தோலிக்க விவிலியத் தேர்வு

யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலையத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட தேசிய ரீதியிலான கத்தோலிக்க விவிலியத் தேர்வு 20ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்தந்தை டியூக் வின்சன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் தரம் 04 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக்கு யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி, இளவாலை திருக்குடும்ப மகாவித்தியாலயம், கிளிநொச்சி புனித திரேசாள் மகாவித்தியாலயம், முல்லைத்தீவு மகாவித்தியாலயம் ஆகிய 04 நிலையங்களில் நடைபெற்ற இப்பரீட்சையில் மறைமாவட்ட ரீதியாகப் பரீட்சைக்குத் தோற்றி வெற்றி பெற்ற 900ற்கும் அதிகமான மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

# கரித்தாஸ் – கியூடெக் நிறுவனத்தினரால் இளையோருக்கான உறவுப்பாலம் நிகழ்வு

கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தின் சமாதானம் மற்றும் சகவாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சர்வமத சமூகமட்ட விழிப்புக் குழுவினர் மற்றும் கிளிநொச்சி மறைக்கோட்ட இளையோர்களை இணைந்து முன்னெடுக்கப்பட்ட உறவுப்பால கள அனுபவ நிகழ்வு கடந்த 06ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

நிறுவன இயக்குநர் அருட்தந்தை செபஜீவன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் குழு அங்கத்தவர்கள் மற்றும் இளையோர் திருகோணமலை மறை மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டு திருகோணமலை கரித்தாஸ் எகெட் நிறுவன சமூகமட்ட விழிப்புக் குழு உறுப்பினர்கள் மற்றும் இளையோரைச் சந்தித்துக் கலந்துரையாடி அங்குள்ள பிரசித்தி பெற்ற இடங்களையும் பார்வையிட்டனர். இந்நிகழ்வில் திருகோணமலை கரித்தாஸ் எகெட் நிறுவன இயக்குனர் அருத்தந்தை போல் றொபின்சன் மற்றும் பணியாளர்கள் கலந்து சிறப்பித்ததுடன் நூற்றுக்கும் அதிகமானவர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர்.

## பாசையூர் புனித அந்தோனியார் பாடசாலை மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு

பாசையூர் புனித அந்தோனியார் றோ.க. மகளிர் வித்தியாலய பழைய மாணவர் சங்கமும் பிரான்ஸ் பழைய மாணவர் சங்கமும் இணைந்து முன்னெடுத்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு 21ஆம் திகதி பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை ஜேம்ஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாசையூர் புனித அந்தோனியார் றோ.க. மகளிர் வித்தியாலயத்தில் கல்வி பயின்று தரம் 5 புலமைப் பரிசில், க.பொ.த சாதாரணம் மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற 20 வரையான மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

## சிலாவத்தை புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த திருவிழா

சிலாவத்தை புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை ஜெரி அவர்களின் ஒழுங்குபடுத்தலில் 26 ஆம் திகதி கடந்த வெள்ளிக்கிழமை நடை பெற்றது.

திருவிழா திருப்பலியை சில்லாலைப் பங்குத் தந்தை அருட்தந்தை பிறையன் அவர்கள் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். 25ஆம் திகதி வியாழக் கிழமை நடைபெற்ற நற்கருணை ஆராதனையை யாழ். கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் அருட்தந்தை ரவிராஜ் அவர்கள் நெறிப்படுத்தினார்.

## புங்குடுதீவு பங்கில் களஅனுபவ சுற்றுலா

புங்குடுதீவுப் பங்கில் முன்னெடுக்கப்பட்ட மறைக் கல்விமாணவர்களுக்கான களஅனுபவச் சுற்றுலா கடந்த மாதம் 29ஆம் திகதி நடைபெற்றது. பங்குத் தந்தை அருட்தந்தை லியான்ஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாணவர்கள் யாழ்ப்பாண நகரத்திற்கு விஜயம் மேற்கொண்டு அங்கு புனித மரியன்னை பேராலயம், கொழும்புத்துறை புனித பிரான்சிஸ்கு சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி, பொது நூலகம் மற்றும் ஊறணி புனித அந்தோனியார் ஆலயம், காங்கேசன்துறை ஆகிய இடங்களைப் பார்வையிட்டனர். இந்நிகழ்வில் 70 வரையான மறைக்கல்வி மாணவர்கள் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

# "இறை அழைத்தல் செபத்தால் வலுப்படுத்தப்படுகின்றது"

**2024 ஆடி மாதம் 28ம் நாள் சுதேச குருக்கள் துறவியர் ஞாயிறு தினத்தை முன்னிட்டு பாப்பிறை மறைபரப்பு சபைகளின் தேசிய இயக்குநர் அருட்பணி பசில் றொஹான் பர்னாந்து அடிகளாரின் செய்தி**



**1889** ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் சென் நகரில் ஜோண் பீகார் என்ற பெண்மணியால் இச்சபை ஆரம்பிக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் இறையரசைக் கட்டியெழுப்ப ஒளியாகத் திகழவேண்டிய குருக்களையும், துறவற சபையினரையும் பயிற்றுவித்து உருவாக்கவும், இவர்களின் வாழ்வை வளப்படுத்தத் தேவையான சகல உதவிகளையும், குருமடங்களுக்கும் துறவற சபை இல்லங்களுக்கும் வழங்கவும், தேவ அழைத்தலைப் பெருக்கவும் அதிவிசேடமாக சுதேச குருக்களை உருவாக்கவும், செபத்தாலும் பரித்தியாகத் தாலும் ஒத்துழைப்பை வழங்கி, திருஅவைக்கு உதவிக்கரத்தை நீட்டுவதே அதன் நோக்கமாகும்.

"இறை அழைத்தல் செபத்தால் வலுப்படுத்தப்படுகின்றது"

2024 ஆம் ஆண்டு ஆடி மாதம் 28ம் திகதியை முன்னிட்டு சுதேச குருக்கள், துறவியர் ஞாயிறு தினத்தில் "இறை அழைத்தல் செபத்தால் வலுப்படுத்தப்படுகின்றது" என்ற கருப்பொருளைச் சிறப்பாகக் கொண்டு இறை அழைப்பிற்காக எம்மை செபத்தால் வலுப்படுத்திக்கொண்டு குருக்கள், துறவியர்களாக எம் வாழ்வை மாற்றி, இறைவனின் தாரக மறையில் பணியாற்றுவோம்.

"உலகப் படைப்பாளரான இறைவனுக்கும் படைப்பிற்கும் உள்ள தொடர்பு செபமாகும் என்பதை நாம் அறிந்து கொள்வோம்" (க.ச.ம 2559)

இறைவனின் ஆசீர்வாதம் மூலம் அவரின் உதவியைப் பெற்று மறைப்பணியில் பணியாற்ற செபம் எமது வாழ்வை வலுப்படுத்துகின்றது.

எனவே திருமுழுக்கினால் நாம் பெற்றுக்கொண்ட அழைப்பு, வாழ்வில் ஏனைய திருவருட்சாதனங்களின் ஊடாக குருக்கள், துறவியர் என்ற அடையாளம் மூலம் முழுமையடைகின்றது. இயேசுவின் விசுவாசத்தையும், அன்பையும் தனது வாழ்வின் அடித்தளமாகக் கொண்டு நாட்டிலும், சமூகத்திலும், பங்கிலும் தனது கடமைகளைச் செய்வார்கள்.

இவர்களின் வாழ்வின் மூலமே பல புனிதர்களைக் காண்கின்றோம். அவர்கள் தமது வாழ்வில் செபத்திற்கு முதல் இடம் கொடுத்து தனது மறைவாழ்வில் இறைவனை விசுவசித்துத் தனது பணிகளைச் செய்கிறார்கள். இதற்கு நல் மனநிலை தேவை. அன்பு, கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களில் இருக்கட்டும். (பிலிப்பியர் 2:5) இறை அழைப்பில் குருக்கள் - துறவியரின் வாழ்க்கை மிகவும் அழகானதும் மற்றும் மகிழ்ச்சியானது மான வாழ்வில் மறைபரப்பு சேவையை இறை விசுவாசத்திலும், செபத்திலும் பொது மக்களுக்காகப் பணியாற்றுகின்றார்கள்.

ஒரு மனிதன் தன் வாழ்வில் செபத்திற்கு முதலிடம் கொடுத்து வாழ்கின்றானோ அவன் ஞானத்திலும், அறிவிலும் மேன்மையானவனாகக் காணப்படுவான். அவனின் மனநிலையும் உண்மையானதாக இருக்கும். அதுபோன்ற வாழ்க்கையை வாழ்பவர்கள் தான் குருக்கள், துறவியர்கள் இவர்கள் இறைவனின் படைப்பிலும் மேன்மையாக இருப்பவர்கள். இவர்களே இயேசுவின் மந்தைகள் அவரை விசுவாசத்திலும், அன்பிலும் பின்தொடர்ந்து தன் கடமைகளை சரிவர நிறைவேற்றுபவர்கள்.

"எல்லோரும் குழந்தைகளாக மாறி எல்லாவிதத் தீய பழக்கங்களினின்றும்




விடுதலை பெற்றால்தான் விண்ணகம் சேர முடியும்" என்று புனித இனி கூறினார். நமது மன நிலையை ஒருநிலைப்படுத்திக்கொள்ள எமது வாழ்வில் செபம் உதவுகின்றது.

செபம் அன்றும் இன்றும் பல புதுமைகளைச் செய்கின்றது. வாழ்வில் நாம் எமது அன்றாட வாழ்வில் செய்கின்ற செயற்பாடுகளுக்காக இறைவனுக்கு நன்றி கூறுகின் றோம். இதனால் இறை விசுவாசமும், ஆசீர்வாதமும் கிடைப்பது மட்டுமன்றி இறைவனோடு உரையாடுவதற்கும் செபம் எம் வாழ்வில் வலிமையாக அமைகின்றது.

இறைவேண்டல் பற்றித் திருவிவிலியத்தில் கூறுவது என்னவென்றால், "ஆனால் நீங்கள் இறைவனிடம் வேண்டும் பொழுது உங்கள் உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக்கொண்டு, மறைவாய்உள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள். மறைவாய் உள்ளதைக்காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைமாறு அளிப்பார்". (மத்தேயு 6:6)

இவை அனைத்தையும் எம் வாழ்வில் படிப்பினையாக கொண்டு, குருக்கள், துறவியர் வாழ்க்கையை நோக்கிப் பிள்ளைகளை வழிநடத்துவதற்காக நாம் அனைவரும் ஒரே திருக்குடும்பமாக இணைத்து இறைவனை நோக்கி செபத்தின் மூலம் பயணிப்போம். அத்தோடு மறைபரப்பு சேவையிலும் இறைவனின் அன்பையும், விசுவாசத்தையும், புனிதர்களின் வாழ்வையும் பற்றிச் சிந்தித்து செயற்படுவோம்.

மறைபரப்பு சேவைக்காகத் தன் வாழ்க்கையை இறைவனுக்காக ஒப்புக்கொடுத்து இவ் உலகை விட்டுப் பிரிந்த குருக்கள், துறவியர்களின் ஆத்துமாக்களுக்கு விண்ணகத்தில் நித்திய இளைப்பாறுதல் கிடைக்க வேண்டி இறைவனை மன்றாடுவோம். அவ்வாறே உலகம் முழுவதும் மறைபணியாற்றி வரும் அனைத்துக் குருக்கள், துறவியர்களுக்காகவும் இறைவனை நோக்கிச் செபிப்போம். இறை அன்பில் நிலைத்திருப்போம்.

# அரசியல் கைதிகளுக்காக குரலற்றவர்களின் குரல் அமைப்பு நடத்திய நினைவேந்தல்

## ருவாண்டா கற்றுத் தந்த பாடம்?



அ.நிக்சன்

இலங்கைதிவின் வடக்குக் கிழக்கில் 2009 ஆம் ஆண்டும் அதற்கு முன்னரும் நடந்த மனித உரிமை மீறல்களும் இன அழிப்புகள் பற்றியும் இன்றுவரை சர்வதேச அரசங்கில் பேசப்பட்டாலும் ரூவாண்டா, கிழக்குத்தீமோர் புரூண்டி போன்ற நாடுகளில் இடம்பெற்ற விசாரணைகள் நடவடிக்கைகள் போன்று இல்லை என்பது பகிரங்கமான உண்மை.

இப் பின்னணியிலேதான் குரலற்றவர்களின் குரல் அமைப்பு யாழ்ப்பாணத்தில் சென்ற (25.07. 2024) வியாழக்கிழமை நடத்திய நினைவேந்தல் நிகழ்வை அவதானிக்க முடியும். இலங்கைச் சிறைகளில் தொடர்ந்தும் தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பற்றி இன்றுவரை எவரும் பேச விரும்பாத சூழலில் கொல்லப்பட்ட மற்றும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் பற்றிய நினைவேந்தல் நிகழ்வு பல செய்திகளைக் கொடுத்திருக்கிறது.

ருவாண்டாவின் கடந்த கால நிகழ்வுகளை கவனத்தில் எடுப்பதற்கான ஒரு வெளிப்படையான முயற்சியாக சர்வதேச குற்றவியல் நீதி மன்றம் ஸ்தாபிக்கப்பட்டது. அந்த நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்குகளில் "வன்முறைக் கும்பல்களின்" 61 தலைவர்களுக்கு குற்றத் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன.

பாலியல் வன்முறையை ஒரு இனப்படுகொலைச் செயலாகக் கருதும் மிக முக்கியமான தீர்மானமும் அந்த நீதிமன்றத்தின் முடிவுகளில் ஒன்றாக உள்ளடக்கப்பட்டிருந்தது.

சுமார் இருபது இலட்சம் வழக்குகள் தொடர்பான விசாரணைகள் உள்ளூர் நீதி மன்றங்களில் முன்னெடுக்கப்பட்டன. ருவாண்டாவில் ஹட்டு மற்றும் டுட்சி பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு மத்தியில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை அந்நாட்டின் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது.

ருவாண்டாவின் இந்த நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகள் பல்வேறு குறைபாடுகளுக்கு மத்தியிலும் கூட, உண்மையில் அந்த நாட்டில் என்ன நடந்தது, அது ஏன் நடந்தது போன்ற விடயங்களை பதிவுசெய்துள்ளன.

அதற்கு மாறான விதத்தில், இலங்கையில் போர்க் காலத்தின் போது இடம்பெற்ற குற்றச்செயல்கள் தொடர்பாக புலன் விசாரணைகளை நடத்தி, அதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்படும் என வழங்கியிருந்த அதன் வாக்குறுதிகளை இலங்கை மீண்டும் மீண்டும் மீறி வந்துள்ளது.

2009 இற்குப் பின்னரான கடந்த 15 ஆண்டுகளிலும் இலங்கை பொறுப்புக்கூற மறுக்கிறது. அது மாத்திரமல்ல ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை பற்றிய பேச்சுக்கள் பத்தோடு பதினொன்றாக மாற்றப்பட்டுள்ளது.

2009 இற்குப் பின்னரான கடந்த 15 ஆண்டுகளிலும் இலங்கை பொறுப்புக்கூற மறுக்கிறது. அது மாத்திரமல்ல ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை பற்றிய பேச்சுக்கள் பத்தோடு பதினொன்றாக மாற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரி மைச் சபை ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் 2007 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் கொழும்புக்கு வந்து வடக்குக் கிழக்கு மற்றும் கொழும்பு, மலையகம் ஆகிய தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் இடம்பெறும் மனித உரிமை மிறல்கள் பற்றி ஆராய்ந்தார். அப்போதைய ஜனாதிபதி மகனிந்த ராஜபக்சவுடன் பேச்சு நடத்தினார். கொழும்பில் மனித உரிமைகளைக் கண்காணிக்கும் சர்வதேச நிலையம் ஒன்றை அமைக்க வேண்டிய அவசியம் பற்றிப் பேசினார். குறிப்பாக அந்த அமைப்பு அரசியல் தலையீடு பெற்ற சுயாதின அமைப்பாக இயங்க வேண்டும் எனவும் கூறியிருந்தார்.

ஆனால் அதற்கு இலங்கை அரசாங்கம் இணக்கம் தெரிவிக்க வில்லை. இதனை லூயிஸ் ஆர்பர் கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தயகத்துடன் வெளியிட்டார்.

அன்று இருந்த அதே சூழல்தான் இன்றும் இலங்கை மனித உரிமைகள் பற்றிய விடயத்தில் காணப்படுகின்றது.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜெனீவா மனித உரிமைச் சபைக்குப் பொறுப்புக்கூற மறுத்துவிட்டார். 2009 இல் நடந்த படுகொலை அதன் பின்னரான சூழல் தொடர்ந்து வடக்குக் கிழக்கில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் பற்றிய விடயங்களுக்கு பொறுப்புக்கூற விரும்பவில்லை.

மாறாக 2009 இற்குப் பின்னரான சூழலில் வடக்குக் கிழக்கில் அமைதி நிலவுகின்றது எனவும் இராணுவப் பிரசன்னம் குறைக்கப் பட்டு விட்டதாகவும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் கூறுகின்றது. நல்லிணக்கப் பொறிமுறைக்குத் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் தயாராக இல்லை எனவும் அவர்களிடையே ஒற்றுமை இல்லை என்றும் விளக்கமளித்து பொறுப்புக்கூறலை இலங்கை அரசாங்கம் தட்டிக் கழிக்கிறது.

# இறைவேண்டலில் புகழ்ச்சியும், நன்றியும்



அருள்முனைவர் : குமார் ராஜா

இறைவேண்டலின் ஐந்து அடிப்படைக் கூறுகளில் முதன்மையா-னது ஆராதனை. அடுத்து வருவது இறைப்புகழ்ச்சி. இறைவேண்டலில் மிகவும் இனிமையானது, எளிதானது, மகிழ்ச்சி தருவது என்னும் பெருமை இறைப்புகழ்ச்சிக்கே உரியது. திரு விவிலியத்தின் பார்வையில் புகழ்ச்சி யும், நன்றியும் ஒன்றே.

'நாம் ஏன் கடவுளுக்குப் புகழ்ச்சி செலுத்த வேண்டும்?' இக்கேள்விக்கு நம் திரு அவையின் திருவழிபாடு நான்கு காரணங்களைச் சுட்டுகிறது:

**1. இறைவன் புகழ்ச்சி பெறத் தகுதியுள்ளவர்.**

இறைவன் ஒருவர் மட்டுமே எல்லாப் புகழ்ச்சிக்கும் தகுதியுள்ளவர். "எங்கள் ஆண்டவரே! எங்கள் கடவுளே, மாட்சியும், மாண்பும், வல்லமையும் பெற நீர் தகுதி பெற்றவர். ஏனெனில், அனைத்தையும் படைத்தவர் நீரே, உமது திருவுளப்படியே அவை உண்டா யின. படைக்கப்பட்டன" (தி.வெ 4:11) என்கிறது திருவெளிப்பாடு நூல்.

**2. இறைவனைப் புகழ்வது நீதியானது.**

ஒருவருக்கு உரியதைக் கொடுப் பது நீதி, கொடுக்க மறுப்பது அநீதி என் பதே நமது அனுபவம். "சீசருக்கு உரிய வற்றைச் சீசருக்கும், கடவுளுக்கு உரிய வற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்" (மத் 22:21) என்னும் இறைமொழிப் படி, கடவுளுக்குரிய புகழ்ச்சியைக் கொடுப்பதே நீதி. அதைக் கொடுக்கத் தவறும்போது அது அநீதியாகிறது.

**3. இறைவனைப் புகழ்வது நம் கடமை.**

"உங்கள் பொருட்டுக் கடவுளுக்கு எப்பொழுதும் நன்றி செலுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். ஆம், அவ்வாறு செய்வது தகுதியே" (2தெச 1:3) என்பது பவுலடியாரின் வாக்குமூலம்.

**4. இறைப்புகழ்ச்சி மீட்புக்குரிய செயல்.**

இறைவனைப் புகழ்வதால் கடவுளின் மாட்சி அதிகரிக்கப்போவதில்லை. மாறாக, நாம் தான் நன்மைகளை, ஆசிகளைப் பெற்றுக் கொள்கிறோம். சிறையில் அடைக்கப்பட்டிருந்த பவுலும், சீலாவும் நள்ளிரவில் கடவுளுக்குப் புகழ்ப்பா பாடியபோது, அவர்களின் கைவிலங்கு கள் உடைந்து, அவர்கள் விடுதலை அடைந்தது (தி.ப16:25) ஓர் எடுத்துக்காட்டு.

இறைப்புகழ்ச்சியினால் மனமகிழ்ச்சி, மனநிறைவு, 'அனைத்தும் நன்மைக்கே' என்னும் மனநிலை மாற்றம் போன்ற பல்வேறு ஆசிகளை நாம் பெற்றுக்கொள்கிறோம். எனவே, எப்போதும் நம் நாவிலும், உள்ளத்தி லும் இறைப்புகழ்ச்சி இருக்கட்டும்.

**இறைப்புகழ்ச்சியின் நான்கு படிகள்:**

மேலோட்டமாகப் பார்த்தால் இறை-புகழ்ச்சி என்பது ஒரே அலகாகத் தோன்றி-னாலும் .இறையியல் ஆய்வின் பார்வையில் இறைப்புகழ்ச்சியில் நான்கு படிகள் உள்ளன.

**1. இறைவனின் மாட்சிமைக்காகப் புகழ்தல்.**

அவர் தம் எல்லையிலா மாண்பி னைக் குறித்து அவரைப் போற்றுங்கள்" (திபா 159:2) என்னும் இறைமொழியின்படி, இறைவனது மாட்சியைப் போற்றுவதே தலைசிறந்த இறைபுகழ்ச்சி. இறை மாண்பு, இறைமாட்சி என்பது என்ன? இறைவனின் பேரன்பு, பேரிரக்கம், உண்மை, வாக்குப் பிறழாமை, நீதி போன்ற இறைவனின் இயல்பு களே அவரது மாட்சி. அவற்றையே முதன் முதலாக நாம் போற்ற வேண்டும். "ஆண்ட-வருக்கு நன்றி செலுத்துங்கள்: ஏனெனில், அவர் நல்லவர், என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு" (திபா 118: 1) என்பது பொருத்தமான எடுத்துக்காட்டு.

**2. இறைவனின் வல்ல செயல்களுக்காகப் புகழ்தல்**

"அவரது வல்ல செயல்களுக்காக அவரைப் போற்றுங்கள்" (திபா 150:2) என்னும் இறைமொழிப்படி, இறைவனின் வல்ல செயல்கள் போற்றப்பட வேண்டும். அடிப்படையில் படைப்பு, மீட்பு என்னும் இரண்டே இறைவனின் வல்ல செயல்கள். இவை இரண்டும் உலகின் தொடக்கம் முதல் இந்நாள் வரை நடந்துகொண்டே இருக்கின் றன என்பது நம் கவனத்திற்குரியது. "என் கடவுளின் மீட்புச் செயல்களை முன்னிட்டு, இன்னும் நான் அவருக்கு நன்றி செலுத்து வேன்" (திபா 43:5) என்பது இதற்கோர் எடுத்துக்காட்டு.

**3. இறைவன் நம் வாழ்வில் செய்த நன்மைகளுக்காகப் போற்றுதல்**

இப்பொழுதுதான் நாம் நம்மைப் பற்றியே சிந்திக்கிறோம். நம் ஒவ் வொருவரின் வாழ்விலும் இறைவன் செய்த எண்ணிலடங்கா நன்மை-களுக்காக அவருக்கு நன்றியும், புகழ்ச்சியும் செலுத்துவது நம் கடமையல்லவா! "ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மை களுக்காகவும் நான் அவருக்கு என்ன கைம்மாறு செய்வேன்? (திபா 116:12) என்கிறார் திருப்பாடல் ஆசிரியர்.

**4. இறைவன் நம் வாழ்வில் அனுமதித்த துன்பங்களுக் காகவும் புகழ்தல்**

இது ஒரு திருவிவிலிய அறைகூவல். எவ்வளவு துன்பங்கள் வந்தாலும், "ஆண்டவர் அளித்தார்: ஆண்டவர் எடுத்துக்கொண்டார். ஆண்டவரது பெயர் போற்றப்பெறுக" (யோபு 1:21) என்னும் யோபுவின் மொழிகள் இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு.

**இறைப்புகழ்ச்சி பற்றிய எச்சரிக்கை**

இறைப்புகழ்ச்சியிலும் சிக்கல்கள் இருக்கின்றன என்பதை யும் திருவிவிலியமே நமக்கு எடுத்துச் சொல்கிறது.

**1. வெளிவேட இறைப்புகழ்ச்சி:**

"வெளிவேடக்காரர்களாகிய உங்களைப் பற்றி எசாயா பொருத்-தமாக இறைவாக்கு உரைத் திருக்கிறார். 'இம்மக்கள் உதட்டி-னால் என்னைப் போற்றுகின்றனர்: இவர்கள் உள்ளமோ என்னை விட்டு வெகு தொலைவில் இருக்கிறது" (மாற் 7:6) என்பது எசாயாவை மேற் கோள்காட்டி இயேசு கொடுத்த எச்சரிக்கை.

**2. முரண்பாடுள்ள இறைப்புகழ்ச்சி**

தந்தையாம் இறைவனைப் போற்றிவிட்டு, அதே நாவால் அவரது சாயலாகப் படைக்கப்பட்ட மனிதரைத் தூற்றுவது ஒரு முரண் என்கிறார் யாக்கோபு. "போற்றலும், தூற்றலும் ஒரே வாயிலிருந்து வருகின்றன. என் சகோதர, சகோதரிகளே! இவ்வாறு இருத்தலாகாது என்கிறார்.

---

# இறைவேண்டலில் மன்னிப்பு



இறைவேண்டலின் பல பரிமாணங்களுள், இறைவேண்டலின் அடிப்படைக் கூறுகளான ஆராதனை, இறைபுகழ்ச்சி, மன்னிப்பு, மன்றாட்டு, அர்ப்பணம் ஆகிய ஐந்தையும் நாம் ஆய்வு செய்கிறோம். ஆரா-தனை, இறைபுகழ்ச்சிக்கு அடுத்து வருவது 'மன்னிப்பு'.

மன்னிப்பின் முக்கியத்துவத்தை நாம் நன்கறி வோம்.இருப்பினும், இறைவார்த்தையின் ஒளியில் நோக்கும்போது தான் மன்னிப்புக்கும், இறைவேண்ட லுக்குமான நெருக்கமான உறவு நமக்கு நன்கு புலப்படுகிறது.

**1. பிறரை மன்னிப்பது இறைவேண்டலின் நிபந்தனை.**

பிறரை நாம் மன்னிக்கும்போதுதான், நாம் இறைவேண்டல் செய்வதற்கே தகுதியானவர்கள் என் னும் உண்மை நம் உள்ளத்தில் ஆழமாகப் பதிய வேண்டும். "நீங்கள் வேண்டுதல் செய்ய நிற்கும்போது, யார் மேலாவது நீங்கள் மனத்தாங்கல் கொண்டி ருந்தால் மன்னித்து விடுங்கள்" (மாற். 11:25) என்பது இயேசுவின் போதனை.

**2. நமது மன்னிப்புக்காக நாம் மன்றாட வேண்டும்.**

நமது அன்றாட இறைவேண்டலில் நாள் தோறும் நமது மன்னிப்புக்காக இறைவனை மன் றாட வேண்டுமென இயேசு கற்பித்தார். எனவேதான், "எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோர் அனை-வரையும் நாங்கள் மன்னிப்பதால், எங்கள் பாவங் களையும் மன்னியும்" (லூக். 11:4) என்று நாம் மன்றாடுகிறோம்.

**3. நமது பாவங்களை அறிக்கையிட வேண்டும்.**

பாவ மன்னிப்புக்காக மன்றாடுவது என்பது ஒன்று: பாவங்களை அறிக்கையிடுவது என்பது வேறொன்று: பாவங்களுக்குப் பரிகாரம் செய்வது என்பது பிறிதொன்று என்னும் புரிதல் பெரும்பான்மைக் கிறிஸ்தவர்களிடம் இல்லை. எனவேதான், பாவ அறிக்கை செய்யும் ஒப்புரவு அருட்சாதனப் பழக்கம் அருகி வருகிறது. இறைவார்த்தையைக் கூர்ந்து வாசிக்கும் போதுதான், பாவங்களை அறிக்கையிடுவதன் அவசியத்தை நாம் உணர்கின்றோம்.

"என் பாவத்தை அறிக்கையிடாதவரை நாள் முழுவதும் நான்கதறி அழுததால், என் எலும்புகள் கழன்று போயின. என் பாவத்தை உம்மிடம் அறிக்கையிட்டேன்: என் தீச்செயலை நான் மறைத்ததில்லை: ஆண்டவரிடம் என் குற்றங்களை ஒப்புக்கொள்வேன் என்று சொன்னேன். நீரும் என் நெறிகேட்டையும், பாவத்தையும் போக்கினீர்" (தி.பா 32:3-5) என்கிறார் திருப்பாடல் ஆசிரியர். தொடக்கத் திருஅவையில் "நம்பிக்கை கொண்டோர் பலரும் தாங்கள் செய்த தவறை ஒப்புக்கொண்டு அறிக்கையிட்டனர்' (தி.ப 19:18) என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. திரு அவை வரலாற்றை அறிந்தவர்கள் முதல் நூற்றாண்டுகளில் பொதுப் பாவ அறிக் கையே நிலவியது என்பதை ஒப்புக் கொள்வார்கள். "ஒருவருக் கொருவர் பாவங்களை அறிக்கை செய்து கொள்ளுங்கள்: ஒருவர் மற்றவருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். அப்பொழுது குணமடைவீர்கள்" (யாக் 5:16) என்னும் யாக்கோபின் அறிவுரை இதனை வலிமைப் படுத்துகிறது.

**4. நமது பாவங்களுக்குப் பரிகாரம் செய்ய வேண்டும்.**

'பரிகாரம்' என்னும் சமஸ்கிருதச் சொல்லுக்க ஈடாக, 'பாவக்கழுவாய்' என்னும் நல்ல சொல்லைப் பயன் படுத்துகிறது நம் திருவிவிலியம். பாவ மன்னிப்புப் பெறு வார்" (லேவி 4:31) என்பது அவற்றுள் ஒன்று.

ஆனால், இயேசு வந்த பிறகு கழுவாய்ப் பலிக் கான தேவை இல்லாமல் போய்விட்டது. காரணம், "இரத் தம் சிந்தி மனிதருடைய பாவத்துக்குக் கழுவாய் ஆகு மாறு இயேசுவைக் கடவுள் நியமித்தார்" (உரோ 3:25) "நம் பாவங்களுக்குக் கழுவாய் அவரே: நம் பாவங் களுக்கு மட்டும் அல்ல, அனைத்துலகின் பாவங்களுக் கும் கழுவாய் அவரே" (1யோவா 2:2) எனவே, பாவமன் னிப்புக் கிடைத்த பின் பாவத்திற்குக் கழுவாயாகச் செலுத் தும் பலிக்கு இடமேயில்லை" (எபி 10:18)

ஆனால், பாவக் கழுவாயின் புதிய பரிமாணங் களை இயேசு அறிமுகம் செய்தார். விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணிடம் இயேசு, "நானும் தீர்ப்பு அளிக்கவில்லை. நீர் போகலாம். இனிப் பாவம் செய்யாதீர்" (யோவா 8:11) என்றார். பாவமற்ற வாழ்வே மிகச் சிறந்த பாவக் கழு-வாய் என்பது இயேசுவின் புதிய போதனை.

இதனையே "தீச்செயலை விட்டு விடுதல் ஆண்ட வருக்கு விருப்பமானது: அநீதியைக் கைவிடுதல் பாவக் கழுவாய்ப் பலியாகும்" (சீஞா 35:3) என்றும், "தந்தை யரை மதிப்போர் பாவங்களுக்குக் கழுவாய் தேடிக் கொள் கின்றனர்" (சீஞா 3:3) என்றும் சீராக்கின் ஞானநூல் கூறுகிறது. சக்கேயுவின் மனமாற்றத்தின்போது அவர் எழுந்து நின்று, "ஆண்டவரே! என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்து விடுகிறேன். எவர் மீதாவது பொய்க் குற்றம் சுமத்தி, எதையாவது கவர்ந் திருந்தால், நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" (லூக் 19:8) என்று அறிக்கை யிட்டது பாவக் கழுவாய்க்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டு. எனவேதான், இயேசு அவரை நோக்கி, "இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று" (லூக். 1:9) என்று அவரைப் பாராட்டி, ஏற்பிசைவு செய்தார்.

*நமது இறைவேண்டலில் மன்னிப்பின் இத்தனை பரிமாணங்களும் இருக்குமாறு பார்த்துக் கொள்வோம்.*

# ‘முதிர் வயதில் என்னைத் தள்ளி விடாதேயும்’

(திபா 71:9)

**மென்மையான அன்பை தாத்தா, பாட்டியர் மற்றும் முதியோருக்கு நம் குடும்பங்களில் காட்டுவோம். நம் நேரங்களை அவர்களோடு செலவழிப்போம்: சுயநலம் கடந்து தனிமையிலும் கைவிடப்பட்ட நிலையிலும் இருப்பவர்களைத் தேடிச் சென்று அன்பு காட்டுவோம். திறந்த இதயத்தோடு ‘எப்பொழுதும் எந்தச் சூழ்நிலையிலும் உங்களை நாங்கள் கைவிட மாட்டோம் என்கிற ஓர் உறுதிப்பாட்டை அவர்களுக்குக் கொடுத்தால், அதுவே மகிழ்வான வாழ்வின் பாதையைக் காட்டும் என்பதைப் புரிந்து செயற்படுவோம்**

அருட்பணி எஸ்.ஏ.ஆனந்த்



**திருத்தந்தையின் சிந்தனைத் தாக்கம்**

அகில உலகத் திரு அவை ஜுலை மாதம் 28 -ஆம் நாளை தாத்தா-பாட்டியர் தினமாகக் கொண்டாட அழைப்பு விடுக்கிறது. நான்காம் ஆண்டு தாத்தா-பாட்டியர் தினத் திருத்தந்தையின் செய்தியின் அடிப் படையில் பின்வரும் சிந்தனைகள் அமைகின்றன.

**தற்காலத்தில் முதுமையின் நிலைமை:**

வேளாங்கண்ணித் திரு விழா என்றாலே ஆண்டுதோறும் நடைபயணம் செல்கின்ற ஒரு குடும்பத் தலைவர், பக்கத்து வீட்டில் வசிக்கும் சொந்த அம்மாவைப் பார்த்து ஐந்து ஆண்டுகள் ஆகி விட்டன என்கிற உண்மைச் செய்தியை அறியும் போது நெஞ்சம் நொறுங் கிப் போகிறது.வேலையின் நிமித்தமாக வெளி மாநிலங்கள், தூரத்து இடங்கள், வெளிநாடுகளில் வசிக்கின்ற பிள்ளைகள் தாய், தந்தையைப் பேணுவதற்காகப் பணியாளர்களை வீடுகளில் வைத்திருந்தாலும் அந்தத் தாயும், தந்தையும் தேடுவது பிள்ளைகளுடைய உடனிருப்பை என்பதை முதிர் வயதுடைய அவர்களால் மட்டுமே அனுபவிக்க முடியும்.

மரணங்கள் வரும் பொழுது ஓடோடி வருகின்ற பிள்ளைகள், அவ்வப்பொழுது தாய், தந்தையை வந்து பார்த்து, அவர்களோடு தங்க யிருந்து நேரங்களைச் செலவிடுவது என்பது, ஆனந்தமான அனுபவமாக மாறும். பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் எப்போது வருவார்கள் என்று வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கும் பெற்றோர்கள், அவர்களைக் காணாமலே கண்மூடி விடுகின்ற சூழலையும், கொடுமையையும் பார்க்க முடிகிறது. இந்தச் சூழலில்தான் திருத்தந்தை முதியோர் மற்றும் தாத்தா, பாட்டியர் தினச் செய்தியில் திருப்பாடலிலிருந்து (71:9) ஒரு வரியைத் தேர்வு செய்திருக்கிறார். “முதிர் வயதில் என்னைத் தள்ளிவிடாதேயும்” என்பதுதான் அந்தச் செய்தி.

**கைவிடாத கடவுள்**

எந்தச் சூழலிலும் கடவுள் தம் பிள்ளைகளைக் கைவிடுவதில்லை. முதுமை எய்தும் பொழுதும், தன்னுடைய ஆற்றலை இழக்கும் போதும், நரைமுடி தன்னில் முளைக்கும் போதும், தன்னுடைய சமூக ஈடுபாடு குறையும் போதும், தன்னால் ஒரு பயனும் இல்லை என்கிற எண்ணம் பிறருக்கு வரும் பொழுதும் முதியோர் உடைந்து போகிறார்கள். ஆனால், மனிதன் பார்ப்பதைப் போல கடவுள் மனிதனின் தோற்றத்தைப் பார்ப்பதில்லை (1சாமுவேல் 16:7). மனிதரால் உதறித் தள்ளப்பட்டாலும், கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட உயர் மதிப்புள்ள கற்களாகவே முதியோர்கள் பார்க்கப் படுகிறார்கள் (1பேதுரு 2:4,5). திருவிவி லியம் முழுவதுமே கடவுளின் உண்மை அன்பின் கதை. தாயின் கருவில் நம்மை உருவாக்கினவர் தம் அன்பனைப் படுகுழியைக் காண விடமாட்டார் (திபா 16:10) என்னும் நிலைக்கு உள்ளது அவரின் அன்பு. இந்த அன்புள்ள கடவுள் முதிர் வயதினருக்கு நெருக்கமாகவே இருக்கிறார். முதிர்ந்த வயது இறைவனின் ஆசீராகவே பார்க்கப்படுகிறது.

முதியோர் அனுபவிக்கும் தனிமை ‘முதிர் வயதில் என்னைத் தள்ளி விடாதே’ என்கிற முதுமையின் குரல், சிலுவையில் தொங்கிய இயேசுவின் குரலாகவே கேட்கிறது: “என் கடவுளே, என் கடவுளே, ஏன் என்னைக் கைவிட்டீர்?” (மத் 27:46). பெரும் பாலான முதியோர்கள் தனிமையை அனுபவிக்கிறார்கள். திருத்தந்தை ஆயராக இருந்த காலத்தில் முதியோர்களைச் சந்திக் கும் நேரம் பெரும்பாலும் அவர்கள் தனிமை யில் இருந்ததைப் பதிவு செய்கிறார். அதோடு பல மாதங்களாகக் குடும்ப உறுப்பினர்கள் அவர்களைக் கண்டுகொள்ளாமல் இருந்த நிலையையும் அவர் சற்று நினைத்துப் பார்க்கிறார்.

அகதிகளாய் தனிமைப்படுத்தப்படுவதைப் பார்க்க முடிகிறது. பல நேரங்களில் பிள்ளைகள் வெளிநாடுகளில் வேலைகளுக்காகச் செல்லும்பொழுது முதியோர்கள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். நகரங்களிலும், கிராமங்களிலும் அவர்கள் ஒதுக்கப் படக்கூடிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இளமைக்கும், முதுமைக்கும் மிகப்பெரிய இடைவெளி இந்தச் சமூகத்தில் காணப்படுகிறது. சில சமூகங்களில் இளவயது மரணம் ஒரு குடும்பத்தில் ஏற்படுகிறது என்றால், அது முதியோர் உயிரோடு இருப்பதால்தான் என்கிற ஒரு மூட நம்பிக்கைக்குப் போய்விடுகிறார்கள்.

வேறுபட்ட வயதுடையோர் இணைந்து வாழ்வது என்பது இந்தக் காலகட்டத்தில் அபூர்வமாகவே பார்க்கப்படுகிறது. முதியோர்கள் பார மாகவே பார்க்கப் படுகிறார்கள். சீக்கிரமே உயிர் போய்விட வேண்டும் என்று வேண்டுகின்ற முதியோர்கள் ஏராளம். ஏனென்றால், ‘எங்கள்’ என்னும் மனநிலையைவிட, ‘என்’ என்கிற மனநிலையே இந்த இளைய தலைமுறையினரிடம் அதிகமாகி விட்டது. தனித்து வாழ்வதில் நிறைவு அடைகின்ற தலைமுறையாக இந்தத் தலைமுறை வாழ்கிறது. பிறரைப் புரிந்து, மதித்து, நிறை வோடு வாழ்வதில்தான் அர்த்தமுள்ள வாழ்க்கை அடங்கி இருக்கிறது.

தனிமையும், கைவிடப்பட்ட நிலையும் சமூகத்தின் தாக்கமாக மீண்டும் மீண்டும் பார்க்கப்படுகிறது. நாளுக்கு நாள் சகோதரத்துவத்தின் இனிமையை நாம் அனுபவிக்கத் தவறிவிடுகிறோம்’ (அனைவரும் உடன் பிறந்தோர், 33). ஒவ்வொரு மனிதனின் கண்ணியமும் காக்கப்பட வேண்டும்.ஆனால், காக்கத் தவறுவதுதான் இந்தத் தலைமுறையினு டைய அவல நிலையாக மாறி இருக்கிறது.

**ரூத்து - முன்மாதிரியான ஆளுமை**

முதியோரைக் காக்கின்ற அற்புதமான திருவிவிலிய ஆளுமையாகத் திருத்தந்தை ரூத்துவை அறிமுகப்படுத்துகிறார். நகோமி தன் மகன் களை இழந்த இரண்டு மருமக்களையும் தாய் வீட்டுக்குத் திரும்பிச் சென்று இல்வாழ்க்கையில் மீண்டும் ஈடுபட அவர்களுக்கு அழைப்பு விடுக்கிறார் (ரூத் 1:6-18). இரண்டு மருமக்களுக்கும் பாரமாகி விட்டோமோ என்கிற ஒரு நிலைக்கு நகோமி தள்ளப்பட்டார். ஒரு கைம் பெண்ணாய் கைவிடப்பட்ட நிலை இருந்தாலும், மருமக்கள் வாழ்வு பெற வேண்டும் என்று உறுதி கொண்டார் நகோமி. தன்னைப் போன்று ஓர் அவல நிலையைத் தன் மருமக்கள் சந்தித்து விடக்கூடாது என்கிற நல்மனது கொண்டிருந்தார் நகோமி.

ஓர்பா என்ற மருமகள் மாமியாருக்கு முத்தம் கொடுத்துவிட்டுத் திரும்பிச் சென்றார். ஆனால், ரூத்தோ பிரிந்து போக மறுத்துவிட்டார். “நீர் செல்லும் இடமே நானும் வருவேன். உமது இல்லமே எனது இல்லம் உம்முடைய இனமே எனது இனம் உம் முடைய தெய்வமே எனக்கும் தெய்வம் நீர் எங்கே இறப்பீரோ, அங் கேயே நானும் இறப்பேன் அங்கேதான் என் கல்லறையும் இருக்கும் சாவிலும் உம்மை விட்டு நான் பிரியேன்” என்று சொல்லி பிரிய மறுத்தார். அவர் சவால்களைச் சந்திக்கத் துணிந்தார்.

‘முதுமையிலும் என் மாமியை தள்ளிவிட மாட்டேன்’ என்கிற உறுதிப்பாட்டோடு வாழ்ந்தார். ரூத்து ஒரு மெசியா இயேசு இந்த உலகத்தின் மீட்பர். அதுபோல முதியோரைக் காக்கும் மீட்பின் முன்னடையாளமாக ரூத்து நமக்கு அறிமுகமாகிறார். இம்மானுவேல் என்றால் ‘கடவுள் நம்மோடு’ என்று அர்த்தம். இந்த இம்மானுவேல் அனுபவத்தைக் கொடுப்பவர்கள் தான் ரூத்துகளாக இந்த மண்ணில் உலா வருகிறார்கள். ரூத்துவின் துணிச்சலும், சுதந்திரமும் புதிய வழித்தடத்தில் நம்மைப் பயணிக்கத் தூண்டுகிறது.

தயக்கமில்லாமல் தாயைப் போல மாமி நகோமியை ரூத்து பாதுகாப்பதை நம் முன்மாதிரி வாழ்வாகக் கொள்வோம். ரூத்து வைப்போல முதியோரைப் பேணுகின்ற ஒவ்வொரு மனிதர்களையும் மாண்போடு மதித்துப் போற்று வோம். மாமி நகோமியை மாண்போடு பாதுகாத்த ரூத்துவை அருமையான திருமண வாழ்வாலும், நல்ல குடும்பத்தாலும், மக்கள் செல்வத்தாலும் இறைவன் ஆசீர்வதித்தார்.

எப்பொழுதும் முதியோருக்குப் பணிவிடை செய்யும்போது இறைவன் அளப்பரிய ஆசீர்வாதங்களால் நிரப்புகிறார் என்பதுதான் ரூத்துவின் வாழ்வியல் பாடமாக நாம் கற்றுக் கொள்கிறோம்.

**இறுதியாக...**

மென்மையான அன்பைத் தாத்தா, பாட்டியர் மற்றும் முதியோருக்கு நம் குடும்பங்களில் காட்டுவோம். நம் நேரங்களை அவர்களோடு செலவழிப்போம் சுயநலம் கடந்து தனிமையிலும், கைவிடப்பட்ட நிலையிலும் இருப்பவர் களைத் தேடிச்சென்று அன்பு காட்டுவோம். திறந்த இதயத்தோடு ‘எப்பொழுதும், எந்தச் சூழ்நிலை யிலும் உங்களை நாங்கள் கைவிட மாட்டோம்’ என்கிற ஓர் உறுதிப்பாட்டை அவர்களுக்குக் கொடுத் தால், அதுவே மகிழ்வான வாழ்வின் பாதையைக் காட்டும் என்பதைப் புரிந்து செயற்படுவோம்.





**‘முதுமையில் என்னைத் தள்ளி விடாதேயும்’ என்கிற முனகல்கள் முதியோர் வாயிலிருந்து வராமல், முண்டியடித்துக் கொண்டு முதியோரைப் பேண சபதம் ஏற்போம்.**

# அன்பின் மகிழ்வு




## குடும்பம் ஓர் குட்டித் திருஅவை

குடும்பம் ஒரு குட்டித் திருஅவை. என்று வர்ணிக்கப்படுகின்றது. ஆதித் திருஅவையில் அக்கில்லாவும் பிரிஸ் கில்லாவும் வாழ்ந்த ஒரு குடும்பம் ஒரு குட்டித் திருஅவையாகும்.

குறிப்பாக இக்குடும்பம் ஒரு செப இல்லமாகவும் இறைபணி செய்யும் ஒரு குடும்பமாகவும் அமைந்தது. (1கொரி 16:19) இவர்கள் யூதக் கிறிஸ்தவர்கள், பவுலுடனான மறைபரப்புப் பணியின் பங்காளிகள். இவர்கள் மக்கள் ஒன்றுகூடிச் செபிப்பதற்கு தம் இல்லத்தைக் கொடுத்து, தம் இல்லத்தையே ஓர் இல்லத் திருஅவையாக மாற்றினார்கள். (உரோமா 16 : 3-5) பவுல் தன் திருமடலில் இல்லத்தில் கூடும் இத் திருஅவைக்கு வாழ்த்துத் தெரிவிக்கின்றார்.

இதனை அடிப்படையாக வைத்துத் திருத்தந்தை ஒவ்வொரு குடும்பமும் ஒரு குட்டித் திருஅவை என்னும் சிந்தனையை வளர்க்கின்றார். ஒவ்வொரு குடும்பமும் ஓர் இல்லத் திருஅவையாக மாற முடியும் என்ற சிந்தனையை நம்மோடு பகிர்கின்றார். ஒவ்வொரு குடும்பமும் ஓர் இல்லறத் திருஅவையாகும். ஒவ்வொரு குடும்பமும் அமர்ந்து உணவு உண்ணும் மேசையை நற்கருணை சூழமைவாகவும் மாற்ற முடியும் என்று திருத்தந்தை குறிப்பிடுகின்றார்.

ஏனெனில் திருவெளிப்பாட்டு நூல் ஓர் அழகான உருவகத்தை நமக்குத் தருகின்றது. ஏனெனில் "இதோ நான் கதவு அருகில் நின்று தட்டிக் கொண்டு இருக்கின்றேன். யாராவது எனது குரலைக் கேட்டுக் கதவைத் திறந்தால் நான் உள்ளே சென்று அவர்களோடு உணவு அருந்துவேன். அவர்களும் என்னோடு உணவு அருந்துவார்கள்". (தி.வெ 3:20) என்று திருவெளிப்பாட்டு நூல் குறிப்பிடுகிறது. இயேசு ஒவ்வொரு குடும்பத்தினதும் கதவை எப்போதும் தட்டிக் கொண்டே இருக்கிறார். எந்தக் குடும்பம் இயேசு வின் தட்டுதலுக்குச் செவிமடுத்து இதயக் கதவுகளைத் திறக்கின்றதோ அக் குடும்பத்தின் உணவு மேசையில் இயேசுவின் பிரசன்னம் என்றும் உண்டு. எனவே, நான் இவ்வாறான குடும்பத்தில் கடவுளின் உடன் இருப்பாலும் குழு மன்றாட்டா லும் குடும்பம் நிறைந்து இருக்கும். இவ்வாறு திருப்பாடல் 128 இன் முடிவுரை "ஆண்டவருக்கு அஞ்சி நடக்கும் ஆடவர் இந்த செப ஆசி பெற்றவராய் இருப்பார்" என்று கூறுவது போல குடும்பங்கள் ஆசீர்பெறும்.

**அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்**
**அகவொளி குடும்ப நல மையம்**

புனித இரண்டாம் யோவான் பவுல் இவ்வாறு குறிப்பிடுகின்றார் "கிறிஸ்தவ குடும்பமானது திருஅவையின் ஒருமைப்பாட்டை விசேட முறையில் உணர்த்தி வெளிப்படுத்துவதனால் கிறிஸ்தவ குடும்பமானது ஓர் இல்லத் திருஅவையாகும். ஒரு குடும்பத்தில் பெற்றோர்கள் தங்கள் வார்த்தையாலும், முன்மாதிரிகையாலும் பிள்ளைகளுக்கு முதல் விசுவாசத்தின் போதகர்களாக இருப்பதாலும் குடும்பம் ஓர் இல்லத் திருஅவையாக விளங்குகின்றது என்று இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் குறிப்பிடுகின்றது.

திருஅவையானது குடும்பங்களின் குடும்பம். திரு அவையானது குடும்பங்களின் இல்லத் திருஅவையில் வாழுகின்றவர்களால் தொடர்ச்சியாக வளப்படுத்தப்படுகின்றது என்று திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிடுகின்றார். உங்கள் குடும்பத்தை செபமும் வழிபாடும் ஒன்றாக நடக்கும், அன்றாட வாழ்வில் கடவுளின் வார்த்தை வாழப்படும் ஓர் இல்லத் திருஅவையாக மாற்றுங்கள் என்று புனித யோண் கிறிஸ்தோத்தம் குறிப்பிடுகின்றார்.

குடும்ப அங்கத்தவர்கள் அன்பில் வளர்ந்து ஒருவரை ஒருவர் மதித்து, ஒழுக்கவியல் விழுமியங்களில் வளரும் ஒரு குட்டித் திருஅவையே குடும்பமாகும் என்கிறார் திருத்தந்தை 16ம் பெனடிக்ற்.

எனவே சுருக்கமாகப் பார்த்தால் குடும்பம் ஒரு குட்டித் திருஅவை, இல்லறத் திருஅவை. காரணம் குடும்பத்தில் தான் நம்பிக்கை உருவாக்கம் நடைபெறுகின்றது. கடவுளின் வார்த்தை வாழப்படுகின்றது. செபமும், வழிபாடும் நடைபெறுகின்றது. ஒற்றுமையும் ஆறுதலும் வழங்கப்படுகின்றது. நற்செய்தி அறிவிக்கப்படுகின்றது. ஒழுக்கவியல் உருவாக்கம் நடைபெறுகின்றது.

எனவே எமது குடும்பங்கள் ஒரு இல்லத் திருஅவையாக வாழவே திருத்தந்தை அழைக்கின்றார். எம் குடும்பங்களை ஆய்ந்தறிவோம் இல்லறத் திருஅவையாக வளர்ப்போம்.

# அகவொளி குடும்ப நலமையம் திருமண சேவை



## மணமகள் தேவை



வயது: 30
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: சட்டமானி (L.L.B)
தொழில் : வங்கி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்: யாழ்ப்பாணம்
வாழ்க்கைத் துணை பற்றிய எதிர்பார்ப்பு:
அரச உத்தியோகம் , ஆசிரியை விரும்பத்தக்கது

வயது: 30
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
தொழில் : கட்டார் (Account Clerk)
கல்வித்தகைமை: G.C.E A/L
பிரதேச செயலகம்: சண்டிலிப்பாய்
வாழ்க்கைத் துணை பற்றிய எதிர்பார்ப்பு:
நற்குணமுள்ள அரச உத்தியோகம், தனியார் வேலை, வீட்டுப்பெண்

வயது: 30
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: HNDE (Civil),
BSC Civil Enginering (UK)
தொழில் : Technical Efficure
பிரதேச செயலகம்: சண்டிலிப்பாய்
வாழ்க்கைத் துணை பற்றிய எதிர்பார்ப்பு:
றோமன் கத்தோலிக்கம்
(ஏனையவை பேசித் தீர்மானிக்கப்படும்)

வயது: 43
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: M.Ph
தொழில் : விரிவுரையாளர்
பிரதேச செயலகம்: யாழ்ப்பாணம்
வாழ்க்கைத் துணை பற்றிய எதிர்பார்ப்பு:
ஆசிரியர், அரசாங்க உத்தியோகம்,
நல்ல குணமுடைய பெண்

## மணமகன் தேவை

வயது: 30
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
தொழில்: ஆசிரியர் (Elocution Trainer)
கல்வித்தகைமை: பட்டதாரி (B.A)
பிரதேச செயலகம்: சண்டிலிப்பாய்
வாழ்க்கைத் துணை பற்றிய எதிர்பார்ப்பு:
தனியார், அரசாங்க நிரந்தர தொழில்

**இவை பற்றிய மேலதிக விபரங்களைப் பெற கீழ் உள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்அகவொளி குடும்ப நல மையம் புனித பத்திரிசியார் வீதி யாழ்ப்பாணம்**
**தொலைபேசி இலக்கங்கள்**
**077- 942 2970, 077 - 904 7651,**
**021- 222 2856**

# வாழ்க்கையில் கவலையா? மகிழ்ச்சியா?



உயரத்தோடு ஒருமுழம் கூட்ட முடியும், உடைக்காக நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? காட்டு மலர்ச்செடிகள் எப்படி வளர்கின்றன எனக் கவனியுங்கள். அவை உழைப்பதும் இல்லை நூற்பதுமில்லை. ஆனால் சாலமோன் கூடத் தமது மேன்மையில் எல்லாம் அவற்றில் ஒன்றைப் போலவும் அணிந்திருந்ததில்லை என நான் உங்களுக்குச் சொல்கிறேன். நம்பிக்கை குன்றியவர்களே! இன்றைக்கு இறந்து நாளை அடுப்பில் எறியப்படும் காட்டுப் புல்லுக்குக் கடவுள் இவ்வாறு அணி செய்கிறார் என்றால் உங்களுக்கு இன்னும்அதிகமாகச் செய்ய மாட்டாரா?

ஆகவே எதை உண்போம்? எதைக் குடிப்போம்? எனக் கவலை கொள்ளாதீர்கள். ஏனெனில் பிற இனத்தவரே இவற்றையெல்லாம் நாடுவர். உங்களுக்கு இவையாவும் தேவையெனஉங்கள் விண்ணகத் தந்தைக்குத் தெரியும். ஆகவே அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும், அவருக்கு ஏற்புடையதையும் நாடுங்கள். அப்போது இவை அனைத்தும் சேர்த்துக் கொடுக்கப்படும். ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதீர்கள். ஏனெனில் நாளைய கவலை அன்றன்றுள்ள தொல்லையே போதும்...

கவலை இல்லாத மனிதன் உலகத்தைத் தெரிந்தவன்,நன்கு புரிந்தவன். கவலை இல்லாத மனிதன் என்ற முன்னை நாள் திரைப்படப் பாடல் நினைவுக்கு வருகிறது. அதேவேளை கவலையில்லாத மனிதன் யாராவதுண்டா...? ஒரு காலத்தில் ஒரு சமயப் பெரி யார்ஒருவரிடம் ஒரு தாயானவள் இறநது போனதன் குழந்தையைக் கையில் ஏந்திக்கொண்டு அவரிடம் வந்து ஐயா! என் குழந்தைக்குஉயிர்ப்பிச்சை தாரும் என வேண்டுதல்செயத் ாள். அந்தப் பெரியாரும் ஒருகணம்யோசித்து விட்டு, அம்மா! நீங்கள் இறப்பு நடவாத ஏதாவவொரு வீட்டில் இருந்து ஒருபிடி அரிசி வாங்கிக்கொண்டு வாருங்கள்உங்கள் குழந்தைக்கு உயிர்ப்பிச்சை தருகிறேன் எனக் கூறி அத்தாயைஅனுப்பினார். அவளும் புறப்பட்டு வீடுவீடாக, நகர்,தெருவென எங்கும் அலைந்தாள். ஏமாற்றத்துடன் திரும்பி வந்து தனது இயலாமையைக் கூறினாள். இதுதான் உலகத்தின் நியதி என்று அந்தப் பெரியவர் கூறினார். எம் அன்றாட வாழ்வில் கவலை முக்கியமானதொரு அம்சமாக ஏற்படுகிறது. காலையில் கண்விழிக்கும் போதும் மாலையில் கண்மூடித் தூங்கும் போதும் கவலையுடன் தான் தூங்குகின்றோம்.

இடைப்பட்ட நேரத்தில் என்னென்ன கவலைகள். சிறுவர் முதல் பெரியோர் வரை, பணக்காரர் முதல் ஏழைகள் வரை அவரவருக்குரிய கவலைகள் எவ்வளவோ? உண்ண உணவு இல்லையே எனக் கவலை ஒருவருக்கு, உண்ட உணவு சமிபாடு அடையவில்லையே என்ற கவலை ஒருவருக்கு. வேலை கிடைக்கவில்லையே என்ற கவலை ஒருவருக்கு, கிடைத்த வேலைக்கு ஊதியம் போதாது என்ற கவலை இன்னொருவருக்கு... இவ்வாறு கவலை கவலை எங்கு நோக்கினும் கவலை, யாரைப் பார்த்தாலும் கவலை. அதனால் தான் நற்செய்தியில் இயேசு இவ்வாறு கூறுகிறார் "எதை உண்போம், எதைக் குடிப்போம், எதை உடுத்துவோம் என நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்கள் வானகத்தந்தைக்கு உங்கள் தேவைகள் அனைத்தும் தெரியும். எனவே இறையரசையும் அதற்கு ஏற்புடையதையும் தேடுங்கள். நாளைய கவலையைப் போக்க நாளை வழிபிறக்கும் என்றார்.

புனிதலொயேலா இஞ்ஞாசியாரும் அவருடைய தோழர்களும் பிச்சை எடுத்துத் தான் அச்சபையை உருவாக்கினார்கள். இந்தக் காலத்திலும் அகில உலகம் எங்கும் பணியாற்றி வருகின்ற அன்னை தெரேசா சபையானது அது ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அன்னையிடமிருந்த பணம் மிகச் சொற்பமே. பணத்தைப் பற்றி அவர்கள் கவலைப்பட்டதாக வரலாறுகள் இல்லை. அவர்களுடைய தேவைகளை ஆண்டவரே நிறைவு செய்தார்.இறைவனை நம்பினோர் எந்நேரத்திலும் கைவிடப் படுவதில்லை. ஆகவே மனித அமைதியைக் கொள்ளை அடிக்கும் கவலைகளிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்.

**உள்ளத்திலே அமைதி பிறக்க வாழ்க்கையில் மகிழ்ச்சி பொங்க ஒவ்வொரு நாளும் எம்மைப் பராமரித்துப் பாதுகாத்து ஆசீர் வழங்கும் இறைவன் வெளிப்படுத்திய பரிசுத்த வேதாகமத்தை வாசித்துத் தியானித்து உள்ளம் உருகச் செபம் செய்வதே சிறந்த வழி.**

# மனிதம் மதிப்போம்

தன்னை "அற்ப பிராணி" என்று அழைத்த மலையைப் பார்த்து அணில் சொன்னது: பொருளை அளக்க இயலா நிலையும், தோற்றமும் உனக்கு இருப்பது உண்மைதான். ஆயினும் ஒரு பொருளைக் கொண்டே உலகம் ஆகுமா? பற்பல பொருளும், பற்பல பருவமும் ஒன்றாய் சேர்ந்தது தானே உலகம்! உயரத்திலும், உறுதியிலும், அளவிலும், விரிவிலும் நீ உயர்ந்தவனாயினும் என்னைப் போல் ஒரு சிறு மாம்பழத்தைக் கடிக்க உன்னால் இயலுமா? என்னைப் போல் ஓடியாடத்தான் உன்னால் முடியுமா? அப்படியிருக்க என்னை நீ அற்பமாக எண்ணலாமா? அற்பம் என்று உலகில் ஒன்றுமில்லை. அனைத்தும் அதனதன் நிலையிலிருந்து தத்தமக்குரிய பணியைச் செய்வதால் தான் உலகம் சீராக இயங்குகிறது. இதில் யார் உயர்ந்தவர்? யார் தாழ்ந்தவர்? என்று எப்படி உன்னால் கணிக்க இயலும்? அணிலின் ஞானத்தைக் கேட்ட மலை பிரமித்து நின்றது. கடவுளின் படைப்பில் உயர்வு தாழ்வு காணும் தகுதி நமக்கில்லை. ஒன்றைப் போற்றுவதும், மற்றொன்றை இகழ்வது மான மனிதன் கண்கொண்டு பார்ப்பதை விலக்கி கடவுள் கண்கொண்டு உலகைக் காண்போம்.

**'தான் படைத்ததெல்லாம் நல்லதென்று கடவுள் கண்டார்'**
**ஆனால் நாம்? மாற்றம் பெறுவோம், எல்லோரையும் அவரவர் நிலைக்கேற்ப ஏற்றுக்கொள்வோம்.**




# என் கேள்விக்கென்ன பதில்!

அருட்பணி செ. அன்புராசா

(ஆனந்தன், யாழ்ப்பாணம்)

**கேள்வி: கடந்த வாரம் 100வது தொடரைத் தொட்டு, 'செஞ்சறி' அடித்து விட்டீர்கள். ஓய்வுபெறும் எண்ணமுண்டா?**

ப: ஆனந்தன், 'செஞ்சறி' அடித்தவர்கள் 'செஞ்சறி' அடித்துவிட்டோமென்று தம் விளையாட்டை நிறுத்தியதுண்டா!? இல்லையே! அதனால் இது இன்னும் அதிக உத்வேகத்தோடு தொடரும்!

(அருமை, யாழ்ப்பாணம்)

**கேள்வி: சாவகச்சேரி வைத்திய சாலைச் சம்பவம் குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?**

ப: அருமை, ஒரு பிரச்சினைக்கு இரு பக்கங்கள் உண்டு. சுயாதீனமான குழு நியமிக்கப்பட்டு முன்வைக்கப் படுகின்ற குற்றச்சாட்டுக்கள் ஆராயப் பட வேண்டும். குறைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். எழுந்தமானத்திற்குக்கதைப் பதையும் எழுதுவதையும் படம் காட்டுவதையும்தவிர்க்கவேண்டும். இதனைக் கைக்கொண்டால் பிரச்சினைகளைத் தீர்க்க வழி பிறக்கும்!

(குருவி, யாழ்ப்பாணம்)

**கேள்வி: சாவகச்சேரி வைத்திய சாலை அத்தியட்சகர் அருச்சுணாவிற்கும் ஏனைய சில வைத்தியர்களுக்கும் இடையில் உருவாகி யுள்ள முறுகல் நிலையில் ஏதும் அரசியல் பின்னணிகள் இருக்கக் கூடிய வாய்ப்புக்கள் உண்டா?**

ப: இருக்கலாம், அதேவேளை இல்லாமலும் இருக்கலாம்! இல்லாமல் இருந்தால் இதனைச் சிலரோ - பலரோ அரசியல் ஆக்கலாம்!

(நாதன், யாழ்ப்பாணம்)

**கேள்வி: தமிழ் பொதுவேட்பாளர் குறித்துத் தங்களின் அபிப்பிராயம் என்ன?**

ப: கட்டாயமாக முன்னெடுக்க வேண்டிய விடயம். தமிழ் மக்கள் ஓரணியில் நின்று ஆதரிக்க வேண்டும். அப்படி ஆதரிக்கும் பட்சத்தில் இவ்விடயம் உலகிற்கும், நம் நாட்டுத் தலைவர்களுக்கும், மக்கள் பிரதி நிதிகளுக்கும் பல உண்மைகளை மக்கள் உணர்த்தக்கூடியதாக இருக்கும்!

(சசி, யாழ்ப்பாணம்)

**கேள்வி: தமிழ் வேட்பாளருக்கு வாக்களிப்பதன் ஊடாக என்ன நன்மை கிடைக்கப் போகின்றது?**

ப: சிங்களத் தலைவர்களுக்கு இதுவரையில் வாக்களித்து என்ன நன்மை கிடைத்திருக்கின்றது, சசி!

(கஜன், கொழும்பு)

**கேள்வி: தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற விடயத்தை வெளி உலகம் எப்படிப் பார்க்கும்?**

ப: கஜன், முள்ளிவாய்க்கால்வரை நாங்கள் செத்தபோது எப்படிப் பார்த்ததோ அப்படித்தான் பார்த்துக்கொண்டிருக்கும்!

(கியா, யாழ்ப்பாணம்)

**கேள்வி: சில அதிகாரிகளின் பேச்சை, அவர்களுக்குக் கீழ் உள்ளவர்கள் ஏன் கேட்பதில்லை?**

ப: தண்ணீரில் மூழ்கிய மனைவியை, "ஏன் நீ காப்பாற்றவில்லை!?" என்று நீதிபதி கேட்ட-போது அவன், 'வழக்கம்போல கத்துறா எண்டு நினைச்சிற்றன் சேர்!' என்றானாம் அவள் கணவன். இச்சம்பவம் போலதான், அதிகாரிகள் எப்போதும் 'கத்திக்' கொண்டிருந்தால் எவனும் கேட்கமாட்டான் கியா!

## நம்மை வளர்த்ததால் தளர்ந்தவர்கள்

குடும்பம் ஒரு கோயில் என எல்லோரும் ஏற்றுக் கொள்கிறோம். குடும்பத்தின் அங்கமாக மூத்தோர் முன்னிருந்து முறைப்படுத்தி வழி நடத்தும் குடும்பம் ஒரு கோயில். புன்னகை, அன்பு, சகிப்புத்தன்மை இவை எம்மத்தியில் இருந்தால் இன்று முதியோர் இல்லங்கள் இல்லாமலிருந்திருக்கும். மூத்தோரின் உடனிருப்புப் பற்றிப் புத்தகங்களைப் படித்துத் தெரிந்து கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. கிறிஸ்தவர்களாகிய நாம் இல்லங்களில் நம் தாத்தா, பாட்டி, தாய் தந்தையரைப் போற்றுவோம். நம்மை வளர்த்ததால் தளர்ந்துள்ளவர்கள் அவர்கள் என்பதை மறவாதிருப்போம்.

# உலக தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோர் நாள்

நமதாண்டவர்இயேசுவின்தாத்தா பாட்டியும் அன்னை மரியாவின் பெற்றோர்களுமான தூய சுவக்கீன் அன்னா இவர்களின்திருவிழாஒவ்வொருஆண்டும் ஜூலை 26 ஆம் நாள் சிறப்பிக்கப் படுவதை முன்னிட்டு, ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதத்தின் நான்காம் ஞாயிற்றுக் கிழமையை உலக தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோர் நாளாகத் திருஅவையில் நாம் கொண்டாடி மகிழ்கின்றோம்.

2021ஆம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் முதன் முதலில் திருஅவையில் சிறப்பிக்கப்பட்ட இந்த உலக நாளானது இவ்வாண்டு ஜூலை 28 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை, நான்காவது ஆண்டு உலக தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோர் நாளாகக் கொண்டாடப்பட இருக்கின்றது.

முதிர்ந்த வயதில் பலர் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டு, தனிமையைத் தோழமையாகக் கொண்டு வாழும் நிலையை சுட்டிக்காட்டும் வகையில், "முதிர்வயதில் என்னைத் தள்ளிவிடாதேயும்" என்ற திருப்பாடல் (71:9) இல் உள்ள இறைவார்த்தைகளை, நான்காவது உலக தாத்தா பாட்டிகள் தினத்திற்கான கருப்பொருளாகத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தேர்ந்தெடுத்துள்ளார்.

வயது முதிர்ந்த நிலையில் உள்ள ஒருவர் நட்புறவுடன் தனது வாழ்வைக் கடவுள் முன் எடுத்துரைக்கும் பகுதியாக அமைந்துள்ளது திருப்பாடலில் உள்ள "முதிர்வயதில் என்னைத் தள்ளி விடாதேயும்" என்ற இறைவார்த்தைகளைத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்இவ்வாண்டிற்கானகருப்பொருளாகத் தேர்ந்தெடுத்துள்ளார் .

தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோரின் குணநலன்களையும், தலத் திரு அவையின் வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் அவர்கள் ஆற்றியுள்ள பங்களிப்பையும் நாம் அறிந்துகொள்வதன் வழியாக தலைமுறைகளுக்கு இடையே இணைப்பை உருவாக்குதல், தனிமையை எதிர்த்துப் போராடுதல் போன்றவற்றை அவர்களுக்கு அளிக்க முடியும்.

தொடக்க நூல் குறிப்பிடும் வார்த்தைகளான "மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று" (தொ.நூல் 2:18) என்பதற்கேற்ப அவர்களைத் தனிமையில் விடாதிருத்தல் போன்றவற்றை வலியுறுத்தும் விதமாகத் தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோர் உலக நாள் கொண்டாடப்படுகின்றது.

## டொன் பொஸ்கோ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிகழ்வில் இலங்கை சலேசிய உப மாகாணத்தின் தலைவர் அருட்தந்தை ரொஷான் மிரண்டா, உப தலைவர் அருட்தந்தை போல் சஜீவக்க, ஒமேகா நிறுவன தலைவர் திரு. ஜோபொல்லோ வின்சென்சொ, அருட்சகோதரன் காபெரியல் மற்றும் அயற் பாடசாலை அதிபர்கள், பாடசாலை மாணவர்கள், உத்தியோகஸ்தர்கள்,தொழிற் கல்வி மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்களென பலரும் கலந்து சிறப்பித்தனர். டொன்பொஸ்கே school of Excellency 2018 ஆம் ஆண்டு பல்லவராயன் கட்டில் ஆரம்பிக்கப்பட்டது. தரம் 1 முதல் க.பொ.த சாதாரண தரம்வரை கற்றல் செயற்பாடுகளுக்கான வசதிகளை கொண்டுள்ள இப்பாடசாலையில் தரம் 1 முதல் தரம் 6 வரை தற்போது 130 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இளவாலை அசிசிபுரம் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திரு விழா

இளவாலை அசிசிபுரம் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 21 ஆம் திகதி பங்குத்தந்தை அருட்தந்தை ஞானரூபன் அவர்க-ளின் ஒழுங்கு படுத்தலில் நடைபெற்றது. கடந்த 16ஆம் திகதி கொடியேற்றத்-துடன் ஆயத்த நாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 20ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது.

திருவிழா திருப்பலியை யாழ். போதனா வைத்தியசாலை ஆன்மீக குரு அருட்-தந்தை றெமோசன் அவர்களும், நற்கருணைவிழா திருப்பலியை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி உப அதிபர் அருட்தந்தை சுமன் அவர்களும் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

## 14 ஆம் ஆண்டு நினைவு

மலர்வு 21 . 10 . 1935

உதிர்வு 16 . 07 . 2010



அமரர்

### பிரான்சிஸ் கிறிஸ்ரி வேதநாயகம்

""ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்கவேண்டும்"
(திருப்பாடல் 27 -4)

7, அச்சக வீதி,
யாழ்ப்பாணம்.

இவரது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## விண்ணக வாழ்வின் 4ம் ஆண்டு நினைவு

மண்ணில் 04 . 07 . 1972

விண்ணில் 20 . 07 . 2020



### சவரிமுத்து கிறிஸ்ரியன் அலெக்சியூஸ்

வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கின்றோம் (உரோ 11 :8)

அன்பு உள்ளங்களை ஏங்க வைத்து
ஆருயிர் பாசப்பிணைப்புகளை தவிக்கவிட்டு
இறைவன் சந்நிதானம் நீர் சென்று
ஈரிரண்டு ஆண்டுகள் ஆனதுவே
உம் அன்பிற்காய் ஏங்குகின்றோம்
ஊமையாய் கலங்குகின்றோம்
ஆற்றிட விளைகின்றோம்

ஆறாத்துயர்தனை ஆற்றமுடியவில்லை
அனைத்தையும் ஒப்படைக்கின்றோம்
தந்தையிடம்
நித்தியத்தில் நீவீர் அவரில் இளைப்பாறி
நிலைவாழ்வு பெற்றிட இறைஞ்சுகின்றோம்
தந்தையே இவர் பரிசாய் இருந்திட
வேண்டுகின்றோம்.

இளவலை மேற்கு,
இளவாலை.

குடும்பத்தினர்

# சமாதான நீதவானாக
## அருட்தந்தை சில்வெஸ்டர்தாஸ் அடிகளார்



அகில இலங்கை நீதியாக சமாதான நீதவான்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் 18 பேர் சமாதான நீதவான்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். சத்தியப்பிரமாணம் ஏற்கும் நிகழ்வு கடந்த 22ஆம் திகதி திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் நடைபெற்றது.

சமாதான நீதவானாக நியமனம் பெற்ற யாழ். மறைமாவட்டக்குருவும் கிளிநொச்சிப் பங்குத் தந்தையுமான **அருட்தந்தை அன்ரனி வின்சன் சில்வெஸ்ரர்தாஸ்** அவர்களும் கிளிநொச்சி மாவட்ட நீதிபதி காயத்திரி சயலவன் முன்னிலையில் சத்தியப்பிரமாணத்தை மேற்கொண்டார்.

# கப்பிட்டல் கம்பஸின் பட்டமளிப்பு விழா




முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியில் கப்புச்சியன் அருட்தந்தையர்களால் நடாத்தப்படும் Capital Campus இல் முன்னெடுக்கப்பட்ட பட்டமளிப்பு விழா கடந்த 27ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. Capital Campus இயக்குனர் கப்புச்சியன் அருட்தந்தை டேவிட் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அளம்பில் சுவாமி தோட்ட இயக்குனர் அருட்தந்தை யூட் அமலதாஸ் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் 19 மாணவர்கள் கணினி, ஆங்கிலம், சிங்களம் ஆகிய கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர்.

# புனித பத்திரிசியார் கல்லூரி சாதனை



யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகத்தின் ஒழுங்குபடுத்தலில் யாழ். கோட்டமட்டப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட **செயற்பட்டுமகிழ்வோம்** உடற்பயிற்சிப் போட்டி கடந்த 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. தரம் 3,4,5 பிரிவு ஆண்களுக்கான போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரி அணிகள் 3தரங்களிலும் முதலாமிடத்தை பெற்றுக்கொண்டது. இப்போட்டிகளில் கலந்துகொண்ட யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை பெண்களுக்கான போட்டியில் - 3ஆம் தரத்தில் இரண்டாம் இடத்தினையும், 4ஆம் தரத்தில் முதலாமிடத்தினையும், 5ஆம் தரத்தில் இரண்டாமிடத்தனையும், பெற்றுக்கொண்தென்பது குறிப்பிடத்தக்கது .

# புதுக்குடியிருப்புப் பங்கில் தாத்தாக்கள் பாட்டிகள் தினம்





தாத்தாக்கள் பாட்டிகள் தினத்தை முன்னிட்டு புதுக்குடியிருப்புப் பங்கில் முன்னெடுக்கப்பட்ட முதியோருக்கான சிறப்பு நிகழ்வு கடந்த 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை அன்ரனிப்பிள்ளை அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களின் தலைமையில் சிறப்புத் திருப்பலியும் தொடர்ந்து முதியோர்களுக்கான கௌரவிப்புக்களும் இடம்பெற்றதுடன் மட்டக்களப்பு விவேகானந்தா உளவளத்துணைக் குழுவினரால் முதியோர்களுக்கான உள ஆற்றுப்படுத்தல் நிகழ்வும் முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் நூற்றுக்கும் அதிகமான முதியோர்கள் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

# யாழ் பேராலயத்தில் முதல்நன்மை ஆயத்தப் பாசறை



யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் முதல்நன்மை அருட்சாதனம் பெறவுள்ள பிள்ளைகளுக்காக முன்னெடுக்கபட்ட பாசறை நிகழ்வு கடந்த 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாட்டி புனித சிந்தாத்திரை அன்னை திருத்தலத்தில் நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இப்பாசறை நிகழ்வில் சிறார்களுக்கான குழு விளையாட்டுக்கள், விவிலிய விளையாட்டுக்கள், கருத்துரைகள் என்பன இடம்பெற்றன. இந்நிகழ்வில் 76 வரையான மாணவர்கள் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

# தீவகம் சின்னமடு ஆலய வருடாந்தத் திருவிழா ஆயத்தம்

தீவகம் சின்னமடு செபமாலை அன்னை யாத்திரைத்தல வருடாந்தத் திருவிழா வருகிற ஆவணி மாதம் 5ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளதால் அதற்கான ஆயத்தங்கள் பரிபாலகர் அருட்தந்தை அஜந்தன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

27ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகியுள்ள நிலையில் வருகின்ற மாதம் 4ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு செபமாலையுடன் நற்கருணை விழாவும் 5ஆம் திகதி காலை 7.00 மணிக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் தலைமையில் திருவிழாத் திருப்பலி யும் நடைபெறவுள்ளதெனத் தெரிவித்துள்ள பரிபாலகர் அவர்கள்திருவிழாவிற்கு வருகைதரவுள்ள பக்தர்களுக்காக திருவிழா அன்று காலை 4.30 மணி முதல் யாழ். மத்திய மற்றும் ஊர்காவற்துறை பேருந்து நிலையங்களிலிருந்து பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதெனவும் மேலும் கூறியுள்ளார்.

# ‘அகவொளி’ யின் திருமண ஆயத்த வகுப்பு



யாழ். அகவொளி குடும்பநல நிலையத்தின் ஏற்பாட்டில் திருமண பந்தத்தில் இணையவுள்ளவர்களுக்காக முன்னெடுக்கப்பட்ட திருமண ஆயத்த வகுப்புக்கள் கடந்த 21, 22ஆம் திகதிகளில் கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தில் நடைபெற்றது. அகவொளி குடும்பநல நிலைய இயக்குனர் அருட்தந்தை டேவிட் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இவ்வகுப்புக்களில் கிளிநொச்சி முல்லைத்தீவு மறைக்கோட்டங்களைச் சேர்ந்த பலர் பங்குபற்றி பயனடைந்தனர்.

# புலோபளை பங்கில் உறுதிப்பூசுதல்



புலோப்பளைப் பங்கில் பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு கடந்த 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பங்குத்தந்தை அருட்தந்தை ஜோர்ச் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. புலோப்பளை புனித சிந்தாத்திரை மாதா ஆலயத்தில் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் 28 பிள்ளைகள் உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

# குருநகர் யாகப்பர் ஆலயத் திருவிழா







குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை யாவிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 25 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது கடந்த 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெற்றுவந்த நிலையில் 24ஆம் திகதி புதன்கிழமை நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழா திருப்பலியை யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களும் நற்கருணைவிழா திருப்பலியை அமலமரித்தியாகிகள் சபை அருட்தந்தை அல்பன் இராஜசிங்கம் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர். திருவிழா திருப்பலி நிறைவில் குருநகர் புனித யாகப்பர் ஆலய வளாகத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள “புனித யாகப்பர்” மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் நடைபெற்றது.மேலும் அன்று மாலை புனிதரின் திருச்சொரூப பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெற்றன இவ்வழிபாடுகளில் புலம்பெயர் நாடுகளில் இருந்து வருகைதந்த ஏராளமான மக்களும் கலந்துகொண்டனர்.

# சுன்னாகம் பங்கில் அன்னையர் தின விழா





சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் கடந்த 21.07.2024 அன்று அன்னையர் தின விழா கொண்டாடப்பட்டு சிறப்பு திருப்பலி அருட்தந்தை றேமன் றெனால்ட் தலைமையில் ஒடுப்புக்கொடுகப்பட்டது. அதனை தொடர்ந்து 75 வயதுக்கு மேற்பட்ட அன்னையர்கள் அன் னையர் மன்றத்தினரல் கௌரவிக்கப்பட்டதுடன். மதிய விருந்து உபசாரம் உட்பட பல சிறப்பு நிகழ்வுகளும் நடைபெற்றன.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2024ம் ஆண்டு ஆடி மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.